Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04)




# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 20 January 2025 Click - 10 ₹. 1


## அறிவிப்பு

60 வயதுக்கு உட்பட்டவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து குடும்ப பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு

**P. துரைபாபு**

CVPA செயலாளர்



CVPA டைரி வெளியீடு நிர்வாக குழு மற்றும் செயற்குழு முன்னிலையில் 29.12.2024 அன்று நடைபெற்றது







இம்மாதம் 26 ஆம் தேதி, 76 வது இந்திய குடியரசு தின விழாவை முன்னிட்டு நமது சங்க அலுவலகத்தில் CVPA தலைவர் திரு.புருஷோத்தமன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். நமது சங்க செயலாளர் துரைபாபு அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார்.

# நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இணைந்த 645 உறுப்பினர்களின் குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன

## சங்க அலுவலகத்தில் நமது சங்கத் தலைவர் புருஷோத்தமன் அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து இனிப்பு வழங்கினார்

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம்!

நமது சங்க அலுவலகத்தில் 76 வது குடியரசு தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு சங்க செயலாளர் துரைபாபு ஆகிய என் முன்னிலையில், நமது சங்க தலைவர் புருஷோத்தமன் அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் முன்னாள் சங்க நிர்வாகிகள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

நமது நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், சங்க உறுப்பினர்கள் பயன் அடையும் வகையில் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு எனும் திட்டத்தை அறிமுகம் செய்தோம். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட ஆயிரம் உறுப்பினர்களை ஒருங்கிணைத்து அவர்கள் மூலம் கிடைக்கும் பணத்தை கொண்டு, இத்திட்டத்தில் இணையும் உறுப்பினர்களின் மறைவுக்குப் பின் அவர்கள் குடும்ப வாரிசுகளுக்கு வழங்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். ஆயிரம் உறுப்பினர்கள் இத்திட்டத்தில் இணைந்தால் எவ்வித காப்பீடும் இன்றி 2 லட்ச ரூபாய் வழங்குவதாக முதலில் கூறியிருந்தோம். தற்போது இத்திட்டத்தில் இணைந்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 645 என்ற அளவில் இருப்பதால் ஒரு லட்ச ரூபாய் வரை குடும்ப நல பாதுகாப்பிற்கு வழங்க முடியும் என்று உறுதியுடன் கூறுகின்றோம். மிகக் குறுகிய காலத்தில் 645 உறுப்பினர்களை திட்டத்தில் கொண்டு வந்து இணைத்து விட்டோம். இது ஒன்றும் அவ்வளவு எளிதில் நடந்து விடவில்லை. ஒவ்வொரு சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும்,முன்னாள் சங்க நிர்வாகிகள், முன்னாள் செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் இத்திட்டத்தால் ஈர்க்கப்பட்ட சமூக அக்கறை கொண்ட ஆர்வலர்கள் போன்றோர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு, விரைவாக பணியாற்றிய காரணத்தால், நாம் திட்டமிட்டபடி ஒரு பகுதியை செவ்வனே செய்து முடித்திருக்கிறோம். இதனால் 14.01.2025 முதல் 645 சங்க உறுப்பினர்களின் குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இதுவே இத் திட்டத்தின் முதல் வெற்றியாகும்.தொடர்ந்து மீதமுள்ள உறுப்பினர்களையும் இணைக்கும் பணியை முடித்துவிட்டு, குடும்ப நல பாதுகாப்பிற்கு இரண்டு லட்ச ரூபாயை நிச்சயமாக விரைவில் உறுதி செய்வோம். இப்போது இத்திட்டத்தில் இணையும் உறுப்பினர்கள் சேர்ந்த நாட்களில் இருந்து, பயனாளி ஆகும் நாட்கள் 120 நாட்கள் என்பது தற்போது 90 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இத்திட்டத்தின் முழுமையான நோக்கத்தை புரிந்து கொண்டவர்கள் தாங்களாகவே முன்வந்து பண உதவி செய்ய முன் வருகின்றனர். இது இத்திட்டத்தின் நோக்கத்தை திசை திருப்பும் என்பதால், நன்கொடை வாங்குவதை தவிர்த்து வருகிறோம். ஆனாலும், இத்திட்டத்திற்காக நமது சங்கத்தின் ரெட்ஹில்ஸ் பகுதி செயலாளர் மேகநாதன் அவர்கள் மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குவதாக அறிவித்துள்ளார். இவருக்கு நமது சங்கம் சார்பாக பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

21.01.2025 அன்று நமது சங்கத்தின் செயற்குழு கூட்டம் கூடி பல்வேறு முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளது.

நமது சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும், நமது சங்க செயல்பாடுகள் குறித்து விமர்சிக்க முழு உரிமை உண்டு. அதேசமயம் சங்க நிர்வாகிகளின் குடும்பத்தைப் பற்றியும், குறிப்பாக நமக்கு எந்த விதத்திலும் தொடர்பில்லாத கல்லூரி மற்றும் மருத்துவமனை குறித்தும், அதன் நிறுவனர்கள் குறித்தும்,தகாத வார்த்தைகளை பயன்படுத்தி வாடஸ்ஆப் குழுவில் பேச யாருக்கும் உரிமையில்லை. இது ஒரு அநாகரிகமானசெயல்.இதுகுறித்துவந்த புகாரைத் தொடர்ந்து செயற்குழுவில் விவாதிக்கப்பட்டது. நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கட்டணம் இல்லா கல்லூரி படிப்புடன், உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ உதவியையும் செய்து வருகின்றனர். அந்த நிறுவனத்தின் நிறுவனர்களை விமர்சிப்பது ஏற்புடையது அல்ல. அறமும் அல்ல. ஒரு சிலர் செய்யும் இதுபோன்ற செயல்களை செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. இதே தவறை தொடர்ந்து செய்து வந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். என்பதை இந்த செயற்குழுவில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

நமது சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட குழுவில் ரினிவலில் இல்லாத உறுப்பினர்களை உடனடியாக நீக்க வேண்டும் என்று செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நமது சங்கம் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் டைரி, பாக்கெட் டைரி, காலண்டர் போன்றவை வெளியிடும் போது விளம்பரங்கள் வாயிலாக வரவேண்டிய வரவு தொகைகள் வராமல் நிலுவையில் உள்ள நிலையில், நமது செயற்குழு எடுத்த முடிவின்படி,எல்லா பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டு

டைரி தயாரித்து கொடுக்கும் பணியை வெளி ஆட்களிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் நமது சங்கத்திற்காக பல்வேறு பிரிண்டிங் வேலைகளை செய்து வரும் எஸ்டி கிராபிக்ஸ் தினேஷ் அவர்கள், 1800 டைரி, பாக்கெட் டைரி, காலண்டர் ஆகியவற்றை தானே தயாரித்து வழங்குவதாகவும், இது தவிர நமது ச ங்கத்திற்கு நன்கொடையாக பத்தாயிரம் ரூபாய் வழங்குவதாகவும் அறிவித்தார். காலம் மிக குறைவாக இருந்த காரணத்தால் இந்த பொறுப்பு அவரிடம் வழங்கப்பட்டது. இந்த காரணத்தால் டைரி தயாராகி வர ஒரு சில வாரங்கள் தாமதம் ஏற்பட்டது. ஆனாலும், நமது சங்க நிர்வாகிகளும், அந்தந்த பகுதி செயலாளர்களும் சிறப்பாக பணியாற்றி சங்க உறுப்பினர்களுக்கு இவைகளை விரைவாக கொடுத்து முடித்துள்ளனர். ரெனிவெல் இருந்தும் டைரி, பாக்கெட்டைரி, காலண்டர் வாங்காமல் விடுபட்டு போன பொதுக்குழு உறுப்பினர்கள் யாராவது இருந்தால், சங்க அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நமது மாநில சங்கம் சென்னை மாவட்ட செயலாளர் ஆகிய என் மீதும் நமது சங்கத்தின் துணைத் தலைவர் வேலு அவர்கள் மீதும் பை அண்ட் செல் நிறுவனம் நடத்திய போட்டோ வீடியோ கண்காட்சியில் கலந்து கொண்டமைக்காக, ஆறு ஆண்டு கள் மாநில சங்க நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கூடாது என்று எங்களுக்கு தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த செய்தியை கேள்விப்பட்டு என்னோடு நிறைய பொதுக்குழு உறுப்பினர்கள் தொடர்பு கொண்டு பேசி தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றார்கள். செயற்குழுவிலும் இதற்கான கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாநில சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

CVPA நியூஸ் இதழின் ஆசிரியருக்கும், நிர்வாக குழுவினருக்கும் உதவியாக இருந்து செயல்படும் வகையில், நமது சங்கத்தின் துணைத் தலைவர் வேல்முருகன் அவர்களையும், பகுதி செயலாளர்களாக இருந்து வரும் மதன் அவர்கள், ரமேஷ் யாதவ் அவர்கள், விஜய கிருஷ்ணன் அவர்கள் மற்றும் அறிவுடைநம்பி அவர்கள் ஆகியோரை கொண்ட குழுவை நமது சங்க நிர்வாக குழு அமைத்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது சங்க வளர்ச்சியை கருத்தில் கொண்டுதான் பல்வேறு முயற்சி களை மேற்கொள்கிறோம். சங்க உறுப்பினர்களாகிய நீங்கள் அளிக்கும் ஊக்கம்தான் நம்மை அடுத்த கட்டத் திற்கு அழைத்துச் செல்லும் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். ஒன்றுபட்ட உணர்வு நம் அனைவரிடம் இருந்தால் மட்டுமே நமது சங்கம் மேம்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
**P. துரைபாபு**
CVPA செயலாளர்

## நமது சங்க செயளாலர் துரைபாபு மீது மாநில சங்கம் விதித்த 6 ஆண்டு தடைக்கு CVPA செயற்குழுவில் கண்டணத் தீர்மானம்.

### தீர்மானம் 1

4.01.2025 அன்று தென்காசியில் நடைபெற்ற TVPA மாநில சங்கத்தின் செயற்குழு கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மான அடிப்படையில், CVPA மாவட்ட சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர்களை மாவட்ட சங்க நிர்வாகிகளிடம் எந்த விளக்கமும் கேட்காமல் ஆறாண்டு காலம் தகுதி நீக்கம் செய்ததை சென்னை மாவட்ட நிர்வாகம் TVPA என்கிற மாநில நிர்வாகத்தை வன்மையாக கண்டிக்கிறது.

### தீர்மானம் 2

மாநிலத்திற்கு நீக்கம் செய்யப்பட்ட எங்கள் மாவட்ட சங்கத்து நிர்வாகிகளை எந்த நிபந்தனையும் இன்றி திரும்ப பெறுவது மட்டுமல்லாமல் உடனடியாக இணைக்க வேண்டும் என்றும் இது வருங்காலங்களில் 28 ஆண்டுகளாக நல் உறவாக தொடர்ந்து பயணிக்க இது உதவும் என்றும் மாவட்ட சங்க செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### தீர்மானம் 3

இனி வரும் காலங்களில் பை - செல் நிறுவனம் மட்டுமல்ல உறுப்பினர்களின் நலனுக்காக தொழில் வளர்ச்சி அடைவதற்காகவும் சென்னையில் எந்த ஒரு நிறுவனம் புகைப்பட கண்காட்சி நடைபெற்றாலோ எங்கள் மாவட்ட சங்க உறுப்பினர்கள் மட்டுமல்ல நிர்வாகிகளையும் கட்டுப்படுத்தாது.
நாங்கள் கலந்து கொள்வோம் என்று செயற்குழுவில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



தென் சென்னை எஸ்2 பல்லாவரம் பகுதி உறுப்பினர் NEW DIGITAL STUDIO. முனீர்பாஷா அவர்களின் மகன் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை பட்டாளம் பகுதி உறுப்பினர் திரு. விக்னேஸ்வரன் என்கின்ற பாபு அவர்களின் மகள் மோனிகா - ஆகாஷ் அவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நிர்வாக குழு, செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.




தென் சென்னை எஸ்1 கேகே நகர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு கார்த்திகேயன் - நித்யா தம்பதியினரின் மூத்த மகளுக்கு நடைபெற்ற மஞ்சள் நீராட்டு விழாவில் நமது சங்கம் சார்பாக பொருளாளர் கௌரி பார்த்தசாரதி அவர்களும், மக்கள் தொடர்பாளர் பாலசந்தர் அவர்களும், மற்றும் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



மத்திய சென்னை,புரசைவாக்கம் பகுதியை சேர்ந்த, நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் சம்பத்குமார் அவர்களின் மனிஷா மாடலிங் ஸ்டுடியோ திறப்பு விழா 17.01.2025 அன்று நடைபெற்றது. இதன் திறப்பு விழாவில் CVPA நிர்வாகிகள் கலந்துகொண்டு வாழ்த்தினார்கள்.

நமக்கு நாமே திட்டத்திற்காக ஒவ்வொரு மாதமும் ரூபாய் ஆயிரம் ECS முறையில் சங்க உறுப்பினர்களுக்கு பயன்படும் வகையில் இப் பணம் திரு. மேகநாதன் ரெட்டில்ஸ் பகுதி செயலாளர் அவர்களின் வாயிலாக அவரின் தனிப்பட்ட பங்களிப்பாக பணம் செலுத்தப்படுகிறது





ஆலயம் மீடியா கிரியேஷன் சார்பில், ஆலயம் ஈஸ்வரன் அவர்கள் நடத்திய ஒரு நாள் பயிற்சி வகுப்பில், நமது சங்கம் சார்பாக செயலாளர் துரைபாபு அவர்களும், துணைத் தலைவர் வேலு அவர்களும், மேலும் சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtarunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351